RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21421

# கவிஞர் நா. முத்துக்குமார் படைப்புகளில் உறவுமுறைகள்

ம. புவனேஸ்வரி [அ, *], ச. குருஞானாம்பிகா [அ]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா.

# Relationships in works Poet Na. Muthukumar

M. Bhuvaneswari [a, *], S. Gurugnanambiga [a]

[a] Department of Tamil, Avinashilingam Institute of Home Science and Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author:
bhuvanavv10@gmail.com

Received: 14-07-2021
Revised: 13-09-2021
Accepted: 16-09-2021
Published: 05-10-2021

Check for updates

## ABSTRACT

Relationships with others or similar groups in society in the youth of everyone's life provide many experiences. Home situations, the sense of safety and care available to parents are significant in this development. For the youth, the family provides the protective features of food, clothing, shelter and love. It is desired to give himself priority and freedom in homes. It is learnt that children's attitudes also develop according to the upbringing of their parents at home. Human behaviors are developed and regulated by social units in which human interaction sits. In this way, relationships are often the state of family relationships and the state of co-relationships of society. It is the urge to live together, the urge to depend, to do so, and to take the lead in the process of conception and co-operation. This article is a demonstration of the nature of such relationships through the works of poet N. Muthukumar.

**Keywords:** Family Relationships, Co-relationships of society, Love, Poet Muthukumar

## முன்னுரை

சமூகத்தின் அடிப்படை உறுப்பாகிய குடும்பம் குழந்தையின் உணர்வுகளைத் தடம் மாற்றுவதில் முதலிடம் வகிக்கிறது. வரையறையின்றி வெளிப்படும் குழந்தையின் உணர்வுகளைச் செப்பமாக வடிவமைப்பதும், வழிமாற்றுவதும் பெற்றோர், உறவினர், நண்பர்கள் ஆகியோரின் பணிகள் சமுதாயம் ஏற்கும் வகையில் குழந்தைதன் உணர்வுகளை வெளிபடுத்த இவர்கள் துணை செய்கின்றனர். குழந்தை தன்னுடைய மூல உணர்வுகளைத் தன் விருப்பப்பட்டு நிறைவு செய்துகொள்ள முற்படும்போது, தடைகள் நேரின் மனதில் போராட்டம் ஏற்படும். இதனால் தன்னிலை உணர்வும், கற்பனை உணர்வும் உருவாக பெற்றோரின் நடத்தை, குடும்பச்சூழல், உறவினர்களின் அணுகுமுறை, நண்பர்களின் உறவு ஆகியன பெரும் பாங்காற்றுகின்றன. இத்தகைய உறவுகள் குறித்து கவிஞர் நா. முத்துக்குமார் படைப்புகளில் பதிவு செய்துள்ளதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## குடும்ப உறவுகள்

குடும்பம் என்பது சமூகத்தின் அடிப்படை கட்டமைப்பு ஆகும். இதனை, “மனிதன் ஒரு சமூகவிலங்கு, மனிதனின் நடத்தைகளை நிர்ணயிப்பவை அவனது சூழமைவுகளே. அவன் தனது குழந்தைப் பருவம் முதல் முதுமைப்பருவம் வரைப் பிறரைச் சார்ந்தும் கூட்டங்களைச் சார்ந்தும்

வாழ்கிறான். அந்த கூட்டங்களையும் பிரிவுகளையும் சார்ந்து ஒருமனிதன் ஒரு சமுதாயத்தில் குழுவில் எவ்வாறு நடந்து கொள்கிறான்? அவனது நடத்தை எவ்வாறு அமைகிறது என ஆராய்வது உளவியலாகும்." என்று இரா. காஞ்சனா குறிப்பிடுகின்றார் (Kanjana,1997).

சமூக வாழ்வின் மேன்மைகளுக்கும், தாழ்வுகளுக்கும் இவ்வுறவுகள் காரணமாகின்றன. மனிதவாழ்வில் ஏற்படும் குழப்பம், தடுமாற்றம், இயலாமை போன்றவற்றைப் போக்கித் தாங்கவும், சில சமயங்களில் இக்குறைபாடுகளுக்கு காரணமாகவும் உறவுகளே அமைகின்றன. நெருக்கமான குடும்ப உறவுகளும், மாறக்கூடிய சமூக உறவுகளும், வாழ்க்கையின் அறன்களாகவும், மனிதர்களை இணைக்கும் பாலமாகவும் சூழலுக்கேற்ப மாற்றம் பெறுகின்றன. இத்தகைய உறவுகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்து அறியலாம்.

- பிறப்புவழி உறவுகள் - தாய், தந்தை, தாத்தா, பாட்டி, உடன் பிறந்தார், சித்தப்பா, சித்தி, அண்ணன், தம்பி, மாமா, அத்தை
- மணவழி உறவுகள் - மனைவி, மாமனார், மாமியார், நாத்தனார்.
- பிறப்புசாரா உறவுகள் - காதலுறவு, அண்டை அயலுறவு, அலுவலக உறவு, நட்புறவுகள் போன்றோர் அடங்குவர்.

மேலும் உறவுகளை,

1. நிரந்தர உறவுகள்,
2. தற்காலிக உறவுகள்

என்றும் வகைப்படுத்த முடிகின்றது. இத்தகைய உறவுகளிடையே ஏற்படும் நெருக்கமும், விலகலும், கனிவும், கண்டிப்பும், ஒத்துப் போதலும், எதிர்த்தலுமான சிக்கல்களை நா.முத்துக்குமார் தனது படைப்புகளில் பதிவு செய்துள்ளார். இவர்தனது பால்யகால நினைவுகளிலிருந்து இன்றுவரை உள்ள உறவுகளின் தன்மைகள், அவர்களோடு இருந்த நேர், எதிர் அனுபவங்கள், நிறைகுறைகள் ஆகியவற்றை படைப்புகள் தெரிவிக்கின்றன.

நா. முத்துக்குமார் பல கட்டுரைகளில் குழந்தைப் பருவத்தின் நினைவுகள் வழியாக உறவுகளை அணுகி இருக்கிறார். வயதும், அனுபவமும் கொஞ்சம் நிறைகளோடும், இதயம் மறக்கநினைக்கும் குறைகளோடும் இன்றைக்கும் இதே உறவுகளை வேறு பார்வையில் திரும்பிக் காட்டுகின்றன. ஒவ்வொரு வயதிலும், வெவ்வேறு தோற்றம் காட்டும் கண்ணாடிதான் வாழ்க்கை.

'அணிலாடும் முன்றில்' என்ற நா. முத்துக்குமாரின் கட்டுரை நூல் முழுவதும் உறவுகளைக் குறிப்பிட்டுள்ளார். அந்நூலில், பிறப்புவழி உறவுகளாக, அம்மா, அப்பா, அக்கா, தம்பி, ஆயா, தாய்மாமன், அத்தை, தாத்தா, சித்தி, அண்ணன், தங்கை, பங்காளிகள், பெரியம்மா, மாமன்கள், அக்கா, கணவன், சித்தப்பா, அண்ணி போன்றவர்களையும் அவர்களின் குணநலன்களையும் அருகிலிருந்து உணர்ந்ததைப் பதிவுசெய்துள்ளார்.

வாழ்வில் புகழின் உச்சிக்கு உயர்ந்து வரும்போது, உறவுகளை ஒதுக்கிவிட்டு நகரும் மனிதர்களுக்கிடையில், அனைத்து உறவுகளின் மீதும் அன்பும், பரிவும், நேயமும், பாவமும் கொண்டவராக எளிமையுடன் வாழ்ந்திருக்கிறார் என்பதை அவருடைய படைப்புகள் வழி அறியமுடிகிறது.

'மிகச் சாதாரணமாய்க்

கேட்டுவிட்டாய் நண்பா

உனக்கென்ன

அக்காவாதங்கையா

கஷ்டப்பட்டுசம்பாதித்து

கல்யாணம் பண்ணித்தர

ஒரேபையன் என்று

எனில்

கஷ்டப்பட்டுசம்பாதித்து

கல்யாணம் பண்ணித்தரமட்டுமா

அக்காவும் தங்கையும்' (Muthukumar, 2016)

இந்த வரிகளுக்குள் இருக்கும் உறவின் தவிப்பை உற்று நோக்கும்போது, உறவுகள்மீது ஊற்றாய் பொங்கிய கவிமனம் விசும்புவதைக் கேட்கமுடிகிறது.

"ஒவ்வொரு உறவுக்கும் ஒரு வாசைன இருக்கிறது. அம்மாவிடம் விபூதி வாசனை, மனைவியிடம் பூ வாசனை, அண்ணனிடம் ரத்தவாசனை, அக்காவிடம் கண்ணீர் வாசனை" என்று எல்லா உறவுக்கும் வாசனையுண்டு என்றும் புதுமை உணர்வை ஊட்டுகின்றார் (Muthukumar, 2007). நா. முத்துக்குமாரின் படைப்புகளில் நண்பர்களும், உறவினர்களும், அவர்பார்த்துப் பழகிய மனிதர்களும் ஓடும் ரயில் வந்துபோகும் பயணிகளாக ஏறி இறங்கிச் செல்கிறார்கள்.

## சிறுவயது நினைவுகள்

நா. முத்துக்குமாரின் படைப்புகளில் 'அணிலாடும் முன்றில்', 'பாலகாண்டம்', 'வேடிக்கைப்பார்ப்பவன்' (தன்வரலாற்று நூல்) 'கிராமம், நகரம், மாநகரம்' மற்றும் கவிதைகள் போன்றவை. இவற்றில் 'வேடிக்கைப் பார்ப்பவனில்' (தன்வரலாற்று நூல்) அனுபவங்களின் ஊடாகக் கண்ட சில உறவுகளை மட்டும் சொல்லிப் போகும் நிலையைக் காணமுடிகிறது. 'கிராமம், நகரம், மாநகரம்' இந்நூலிலும் சில இடங்களில் உறவுகள் இடம்பெறுகின்றன. 'பாலகாண்டம்' இளமைப்பருவ நினைவுகளோடுதான் உணர்ந்த உறவுகளின் தன்மைப் பற்றி கூறியுள்ளார். 'அணிலாடும் முன்றில' முழுவதும் உறவுகளின் சங்கமமாக அமைகின்றது.

## அம்மா உறவு

முத்துக்குமார் தன்னுடைய அம்மாவை இளம் வயதிலேயே இழந்தவன் என்பதால் எல்லாப் பெண்களிடமும் அவன் தன் தாயைத் தேடிக்கொண்டிருந்தான். அம்மாவின் சாயலை தேடுவதிலிருந்து கடைசிவரை அவன் விடுபடவில்லை. முத்துக்குமாரின் எல்லாப் படைப்புகளிலும், அம்மாவைப் பற்றி தீட்டப்பட்ட அழகழகான சித்திரங்கள் இல்லாமல் இருக்காது. அவனே அப்பாவாக மாறிய பின்னும், அவன் அம்மா பிள்ளையாகவே இருந்திருக்கிறான். நா. முத்துக்குமார் தன் அம்மாவுடன் வாழ்ந்த சில காலங்களில் உணர்ந்தவற்றை நினைவில் தங்கியதை எழுதியுள்ளார். சிறுவயதில் தாயை இழந்த பிள்ளைபடும் வேதனையை அவரின் எழுத்துக்களில் காணமுடிகிறது.

தன் நினைவில் என்றும் வந்துபோகும் அம்மாவை, நா. முத்துக்குமார், "நீ நிரந்தரமானவள், உனக்கு அழிவு இல்லை. ஆகாயம் நீ, அதில் சுற்றிச் சுடரும் சூரியன் நீ, சந்திரனும் நீயே, நட்சத்திரங்களின் நின்று ஒளிரும் பிரகாசத்திலிருந்து புலப்படுவது உன் கண்கள் அன்றிவேறென்ன? நீயே முகிலாகவும் முகில் தூவும் மழையாகவும், மழைநனையும் நிலமாகவும் மலர்ந்து கொண்டு

இருக்கிறாய். நதியும் நீ, கரையும் நீ, கரைதாண்டி விரியும் காட்சியும் நீ" என்றுகூறி, எப்பொழுதும் அம்மாதன்னுடன் இருப்பதுபோல் கற்பனைச் செய்துள்ளதைக் காணலாம் (Muthukumar, 2007)

## அம்மா உறவு

பெண்கள் பலநிலைகளில் வாழ்ந்தாலும் தனக்கென்று பிறந்த குழந்தைகளுக்காக, தன்னை வருத்திக் கொண்டு அவர்களின் நலனுக்காக போராடும் தன்மையைக் காணமுடிகிறது. இதை நா. முத்துக்குமார் தனது படைப்புகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அவற்றுள் சில,

சிறுபிள்ளையைகையில் ஏந்திக் கொண்டுமாலையில் அகல் விளக்குகள் ஏற்றுபவள் - அம்மா.

ஆலமரத்தின் கிளையில் பழைய சேலையைத் துணியாக்கி, அதில் குழந்தையைக் கிடத்தி அறுவடை வேலை செய்யும்போது நொடிக்கொருமுறை குழந்தையை வந்து எட்டிப்பார்ப்பவள் - அம்மா.

அலுவலகம் சென்று வந்து அலுப்போடு இருந்தாலும் அழுக்கோடு இருக்கும் மகனை அணைப்பவள் - அம்மா.

பள்ளியின் கதவுகள் காலையில் நேரமானதால் மூடிவிடக் கூடாது என்பதற்காக பரபரப்போடு இருக்கும் மாநகரத்து அவசர வாகன நெரிசலில் தன் இரண்டு சக்கர வாகனத்தில் தன் குழந்தையைப் பத்திரமாகக் கொண்டு வந்து விடுபவள் - அம்மா.

இறுதியாக புதைக்கும் மகன்களையெல்லாம், விதைக்கும் விதைகளாக எண்ணிக் கொண்டிருக்கும் ஈழத்துத் தாயிடமும் காண்பதும் அம்மாவின் முகம். இறுதியாக அம்மா,

"உன்னுள் கருவாகி, உனக்குள் உருவான சின்னஞ்சிறு செடிநான், மண்ணுள் நான் வீழ்ந்துள்ள உதிரும் வரை என்னுள் நீவாழ்வாய்!" என்று தன் தாய் பற்றிய நினைவுகளை கண்ணீரோடு பதிவு செய்துள்ளார் (Muthukumar, 2017).

மேலும் அம்மாக்களின் உலகம் பற்றி கூறும் போது, நா. முத்துக்குமார் "அம்மாக்களின் உலகம் அஞ்சறைப் பெட்டிகளால் ஆனது. ஒவ்வொரு அஞ்சறைப் பெட்டியைத் திறக்கும் போதும் அதற்குள் ஓர் அம்மா அழுது கொண்டிருக்கிறாள். ஒவ்வொரு அறையிலும் அவளது கனவுகள் ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அதன் மிளகாய்த் தூளில் அவள் கோபம், அதன் மஞ்சள் தூளில் அவள் காமம், அதன் சில்லறைகளில் அவள் பாசம்" என்று அம்மாக்களின் உலகம் அஞ்சறைப் பெட்டுக்குள்ளிருக்கும் பொடிகளோடு கலந்திருக்கும் என்பதைத் பதிவுசெய்துள்ளார் (Muthukumar, 2014).

அப்பா உறவு

'என் அப்பா

ஒரு மூட்டைபுத்தகம்

கிடைப்பதாக இருந்தால்

என்னையும் விற்றுவிடுவார்' (Muthukumar, 2017)

என்று அப்பாவை பற்றி குறிப்பிடும்போது நா. முத்துக்குமார் அவரிடம் தோழன் போல நட்புடன் உறவு கொண்டு வளர்ந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. அப்பா தமிழாசிரியர் என்பதால் வீடு முழுவதும் புத்தகங்கள் நிறைந்திருந்தன. புத்தகங்கள் படிப்பதில் மிகுந்த ஆர்வமுள்ளவராக இருந்தார் (Muthukumar, 2017). புத்தகங்கள் வாங்கியே கடனாளியானவர். மேலும் புத்தகங்களை காஞ்சிபுரத்தின்

அனைத்து கிளை நூலகங்களிலும் உறுப்பினராகி புத்தகங்களின் முடிவில்லாத உலகிற்குள் தன்னையும் அழைத்துச் சென்றதாக கூறும் நா. முத்துக்குமார் தன் அப்பா தன்னிடம் அடிக்கடிச் சொல்லும் வாசகம்,

“எனக்கு தமிழ் மட்டும் தெரிஞ்சதாலதான் தமிழ் புத்தகம் மட்டும் வாங்கினேன். அதனால் கடனாளியாக மட்டும் இருக்கேன். ஆங்கிலமும் தெரிஞ்சிருந்தா நாம நடுத்தெருவுலதான் நின்னிருப்போம்” என்று அப்பாவின் புத்தக வாசிப்பைப் பெருமையுடன் குறிப்பிடுகின்றார் (Muthukumar, 2017).

## அக்காக்களின் அன்பு

நா. முத்துக்குமாருக்கு உடன்பிறந்த சகோதரிகள் இல்லை. தம்பி மட்டுமே. இருந்தாலும் தன் நண்பர்களின் வீடுகளுக்குச் செல்லும்போது அங்கு பாசத்தோடு கவனிக்கும் அக்காக்களைக் குறிப்பிடும் போது, “என் ஆளுமையின் ஒவ்வோர் அணுவிலும் நண்பர்களின் அக்காக்கள் நிறைந்துள்ளது உண்மை” என்று அக்காக்களின் அன்பினையும், அக்காக்கள் திருமணமாகி புகுந்த வீடு செல்லும்போது, அவ்வீட்டில் நிகழும் நெகிழ்வான சூழல்களையும் அவளுடைய பிரிவால் அவள் பயன்படுத்திய அஃறிணை பொருள்கள் அவள் இல்லாமல் வருந்துவதையும் எழுதி, மனதிற்கு நெகிழ்வானதொரு நினைவை ஏற்படுத்தியதைக் காணமுடிகிறது. அக்கா பிறந்து வாழ்ந்த வீட்டில் உள்ள அஃறிணைப் பொருளுக்கும், உயிர் உணர்வு இருப்பதாக கற்பனை நயத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

பல நண்பர்களின் அக்காக்கள் தன்னையும் ஒரு உடன்பிறந்த தம்பியாக நினைத்து அன்பு காட்டியதை பதிவு செய்ய மறக்கவில்லை நா. முத்துக்குமார். பனிரெண்டாம் வகுப்பு படிக்கும்போது தன் நண்பனின் அக்கா எஸ்தர் என்பவள். தன் தவறுக்கு பாவமன்னிப்பு கேட்ட பிறகே பேசியதாக கூறுகின்றார். தான் மறைந்து நின்று புகைப்பிடித்ததைப் பார்த்ததும், தன்னிடம் பேசாமல் இருந்து பின் தேவாலயம் சென்று பாவமன்னிப்பு கேட்டுப் பேசியதாக குறிப்பிடுகின்றார். இதனால் தான் ஒவ்வொரு முறை புகைப்பிடிக்கும் போதெல்லாம், அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டே இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். மற்றொரு நண்பனின் அக்கா அவளுக்கு வந்த காதல் கடிதத்தை தன்னிடம் படித்துக் காட்டியதோடு மட்டுமில்லாமல், நல்ல முடிவை கேட்டுத் தன்னிடம் கூறியதும், பின் மூன்று மாதத்தில் வேறு ஒரு ஆணுடன் திருமணம் நடந்ததும் மறக்க முடியாத நிகழ்வாக கூறுகிறார். இதனை,

“வேறு ஓர் அக்கா எனக்கு ரொம்ப பிடிக்கும் என்று மழைக் காலங்களில் தன் கிராமத்தில் இருந்து பொரி அரிசியுடன் சேர்த்து ஈசல் வறுத்து எடுத்துக் கொண்டு வரும். உண்மையில் பொரி அரிசியுடன் வறுபடும் ஈசல்களே ஆரம்பித்து வைக்கின்றன மழையின் வாசனையை. சாணி கொட்டி வைத்து இருக்கும் எருக்குழிகளில் ஈசல் பிடித்த கதையை அந்த அக்கா சொல்லச் சொல்ல... நாளெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கலாம். ஓவியம் வரைவதில் அந்த அக்காவுக்கு அவ்வளவு ஆர்வம். என் ஜுவாலஜி ரெக்கார்ட் நோட்டில் எல்லாப் பாடங்களையும் வரைந்து கொடுத்தது அந்த அக்காதான். அது தவளை வரைந்தால் அதன் கால்களில் குளக்கரையின் சேறு இருக்கும். அவ்வளவு துல்லியமும் ரசனையும் கொண்ட படங்கள் அவை. இன்னமும் அந்த நோட்டுகளைப் பத்திரப்படுத்தி வைத்து இருக்கிறேன். ஜப்பானியஹைக்கூ கவிஞர் எழுதிய அந்த அக்காவின் ஞாபகங்கள்,

‘பழைய குளம்

தவளை குதிக்கிறது

க்ளக்...க்ளக்....’

என்னை நானாக்கிய எல்லா அக்காக்களுக்கும்

என் அனந்த கோடி நன்றிகள்”

இவ்வாறுதன் நலனில் அக்கறைக் கொண்ட அக்காக்களை பட்டியலிட்டுள்ளார் (Muthukumar, 2017).

## தம்பி உறவு

"நான் மலர்ந்த தொப்புள் கொடியின் இன்னொரு பூ. என் உதிரத்தின் பங்காளி. வேற்றுருவன் ஆனாலும் என் மாற்றுருவன். நான் உண்ட மிச்சப் பாலின் ருசி அறிந்தவன். ஆதலால், என் பசி அறிந்தவன். என் நாணயத்தின் இன்னொரு பக்கம் துக்கத்தில் எனைத் தாங்கும் தூண். சக ஊன்!" என்று தம்பிக்கு சரியான ஒரு விரிவாக்கம் கொடுத்த நா. முத்துக்குமார், 'தம்பி என்பவன் அண்ணனுக்காகத் தன் இன்பங்களைத் தொலைத்தவன்!" என்ற ஜான் ஆஸ்டின் வாசகத்தைக் கொண்டு இக்கட்டுரையைத் தொடங்கியுள்ளார் (Muthukumar, 2017).

தன் தம்பி பிறந்தபோது, அவனைப் பார்த்தத் தருணங்களும், அம்மாவுடன் தனக்கு இருந்த நெருக்கத்தை குறைந்த நிலையையும் எண்ணி கோபம் கொண்டு யாருமில்லா நேரத்தில், அவன் பிஞ்சுகையை கிள்ளியதும், அதற்கு பதிலடியாக தன் சிறுநீரைக் கொண்டு தம்பி தன் சட்டையை நனைத்தது என்றும் மறக்க முடியாதது என்று கூறியுள்ளார். தன் தம்பியின் உறவு குறித்து உணர்ச்சி பொங்க பதிவு செய்துள்ளதைக் காண முடிகிறது. முடிவாக 'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்' என்று பெருமையுடன் கூறுவதைக் காணமுடிகிறது

## பெரியம்மா உறவு

'பெருமையடையாதே

பௌர்ணமியின் முழுமையும்

ஓர் இரவுக்குத்தான்'

என்ற ஜென் தத்துவம் கூறும் பௌர்ணமியின் ஒளி, பெரியம்மாவின் அன்புக்கு உதாரணமாகக் கூறி 'உறவு வேறு, உதிரம் வேறு' என்ற நிலையில் பெரியம்மாவின் கூட்டல் கழித்தல் அனுபவங்களை அனுபவித்து உண்மைச் செய்திகளைக் கூற தவறவில்லை (Muthukumar, 2017).

கோடை விடுமுறையில் அம்பத்தூரில் இருக்கும் தன் அம்மாவின் அக்கா வீட்டிற்குச் சென்று, அங்குள்ள அண்ணன், தம்பி, அக்கா இவர்களுடன் மகிழ்ச்சியாக விளையாடும் தருணங்களை என்றும் மறக்க முடியாது. பெரியம்மா தனக்காக பிடித்த உணவுகளை மீன் கறியுடன் சேர்த்து சமைத்துக் கொடுப்பதும், விடுமுறை முடியும் கடைசி வாரத்தில் தனக்காக துணி எடுத்துத் தைத்து சட்டைக் காலரில் மஞ்சள் வைத்து அணியசெய்யும் போதும் பெரியம்மாவின் கண்களில் நீர்வழியும். தாயில்லாமல் வளரும் தன்னை நினைத்து அழும் அக்கண்ணீருக்குப் பொருள் புரியாமல் நிற்கும் போது, 'தங்கைப் பிள்ளைதன் பிள்ளைத்தானே' என எண்ணி வருந்தினாள் என்றும் சொல்லிவிட முடியாது. இத்தகைய அன்போடு இருக்கும் பெரியம்மா, ஒருமுறை பெரியம்மாவின் மகன் பந்து எறிந்து தொலைக்காட்சியை உடைத்து விட்டான். இதை கண்டித்து பெரியம்மா சிறு கட்டையை எடுத்துக் கொண்டு அவனை துரத்தும்போது அவன் அவளின் கையில் அகப்படாமல் ஓடும் போது, இவன் அவனைபிடித்து,'பெரியம்மா இங்க வாங்க மாட்டிகிட்டான்' என்று கூற,பெரியம்மா மூச்சுவாங்க அருகில் வந்து கட்டையைக் கீழே போட்டுவிட்டு, 'ஏன்டா என் புள்ள அடி வாங்குறதல உனக்கு அவ்வளவு சந்தோஷமா? என்றதும், நா.முத்துக்குமாருக்கு,

"அந்தகணம் என் கால்களுக்குக் கீழே தரை நான்கு அடி பிளந்து, உள் மனதிலிருந்து ஒரு குரல் சொன்னது, 'உறவுவேறு, உதிரம் வேறு" என்று உணர்ந்த சூழ்நிலையைச் சரியான உதாரணங்ளோடு கூறியுள்ளதைக் காண முடிகிறது (Muthukumar, 2017). இவ்வாறு பெரியம்மா உறவை என்னதான் பாசத்தோடு பார்த்தாலும் அது உறவுநிலையில் மட்டுமே பார்க்கக் கூடியது என்பதை கூறாமல் கூறியிருப்பது சிறப்பிற்குரியது.

## மாமன்கள் உறவு

மாமன்கள் பற்றி கூறும் போது மூன்றுவகை உறவுநிலைகளில் குறிப்பிட்டு, அவர்களின் நேர் எதிர்மறை குணங்களை உணர்வோடு பதிவிட்டுள்ளார் நா.முத்துக்குமார்.

- அக்காமாமா
- அத்தைமாமா
- அத்தைமகன்கள், மாமாமகன்கள்

என்ற உறவுகளின் தொடக்கத்தில்,

'மலையும் அதேமலைதான்

வழியும் அதேவழிதான்

மாறியிருப்பதுமனசுமட்டுமே'

என்ற கவிதை வரிகளோடு பழகிய நாட்களையும் அவர்களிடம் பெற்ற அனுபவங்களையும் வரிசைப்படுத்தியுள்ளார் (Muthukumar, 2017).

## அக்கா மாமா

அக்காவின் கணவனான மாமா, சில நேரங்களில் தனக்கு தந்தையாகவும், அண்ணனாகவும், தோழனாகவும் உணரவைத்தவர். இவர் நா. முத்துக்குமாரை அழைத்துச் சென்று மட்டைபந்து விளையாட கற்றுக் கொடுத்தும், அவருடைய இரண்டுசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு கற்றுக் கொடுத்தும் பழக்கியுள்ளார். இவரிடமிருந்து ஒருசில ஆளுமைகளை தன்னுள் நுழைய வாய்ப்பு ஏற்பட்டதாக கூறி பெருமிதம் கொள்கின்றார்.

## அத்தை மாமா

அத்தை வீடுகளுக்கு விடுமுறையில் செல்லும்போது மாமாவிடம் எப்பொழுது தலைகுனிந்தே பேசும் சுபாவம் கொண்டவன். அத்தையின் கணவரான மாமா தன்னை அக்கறையுடன் கவனிப்பதும், வீட்டுக்கு திரும்பிச் செல்லும்போது 20 ரூபாய் கொடுப்பதும் அவருக்குத் தெரியாமல் அத்தை 100 ரூபாய் கொடுப்பதும், எப்பொழுதும் வழக்கமாக இருக்கும்

## அத்தைமகன்கள், மாமாமகன்கள்

மாமாமகன்களிடம் நா. முத்துக்குமாருக்கு நட்பு அதிகம். வீட்டுக்குத் தெரியாமல் இவர்கள் இரண்டுசக்கர வாகனத்தில் செல்வதும், படம் பார்ப்பதும் பீர் அருந்துவதும் என அனைத்து திருட்டு பழக்கங்களையும் இவனுக்கு அவர்களும், அவர்களுக்கு இவனும் பரஸ்பரம் சிலவற்றை கற்றுத் தந்தும் தன் பால்யத்தைக் கடந்து வந்திருக்கின்றனர். பால்யத்தில் இவனும் இவனது அத்தைப் பையனும் ஒரே பெண்ணைக் காதலித்துள்ளனர். ஆனால் இருவரும் தன் விருப்பத்தைக் கூறாததால் வேறு ஒருவருடன் திருமணம் நடந்தேறியதையும் பதிவு செய்திருக்கிறார்

## சித்தப்பாஉறவு

"சிறகில் இருந்துபிரிந்த

இறகுஒன்று

காற்றின் தீராதபக்கங்களில்

ஒருபறவையின் வாழ்வை

எழுதிச் செல்கிறது"

என்ற சிவராமின் கவிதையை தொடக்கமாகக் கொண்டு, சித்தப்பா உறவினை விளக்கியுள்ளார் (Muthukumar, 2017). கூட்டுக் குடும்பத்தில் வளர்ந்த பிள்ளைகள் தன் அம்மாவை அண்ணி என்று

அழைக்கும் நிலை உருவாகிறது. அவ்வீட்டில் சித்தப்பாக்களின் வளர்ந்த சூழல்தான் காரணமாகிறது. சித்தப்பாக்கள் தன் அண்ணியை அழைக்கும்போது அதைக் கேட்டுக் கேட்டு அக்குழந்தைகளும் அப்படியே அழைக்கின்றார்கள். இதைக்கண்டித்து 'அம்மா' என்று கூப்பிட வற்புறுத்தினாலும் அதை அக்குழந்தைகள் ஏற்பதே இல்லை.

சித்தப்பாவின் பாதிப்புகள் இல்லாமல் எவரும் பால்யத்தைக் கடந்து வந்தவர்களாக இருக்க முடியாது. தந்தையிடம் கூட காணமுடியாத உலகத்தை வொஞ்சம் கூடுதல் உயரத்துடன் பார்க்கின்றனர். சித்தப்பாவுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் கறிகடைகளுக்குச் செல்லும் குழந்தைகள் இல்லாத வீடுகளே இருக்காது. இத்தகைய சித்தப்பாக்கள் பற்றி நா. முத்துக்குமார்,

"கல்லூரி முடிந்து, பொருளாதாரத்தின் வேர்த்தேடிப் போராடும் சித்தாப்பாக்களை அருகிலிருந்து பார்க்கையில் சித்தப்பாக்களுடனான நெருக்கம் இன்னும் கொஞ்சம் கூடுதல் பிரியங்களைச் சேர்த்துக் கொள்ளும். வேலை இல்லாதவனின் பகலும், நோயாளிகளின் இரவும் நீளமானவை என்பதைப் போல்.... சித்தப்பாக்கள், சித்தப்பாக்களால் இல்லாத தருணங்கள் இவை" என இவ்வாறு சித்தப்பாக்கள் வாழ்வில் நுழைய, வாழ்க்கைக் காற்று அவர்களை திசைமாற்றிப்போட, மீண்டும் குடும்ப நிகழ்ச்சிகளில் காணும்போது நினைவுக்கு வருவது பால்யங்களில் அவர்களோடு இருந்த நாட்கள் மட்டுமே என்பதேயாகும் (Muthukumar, 2017).

## அண்ணி உறவு

நா. முத்துக்குமார் அண்ணியை, "நாளைக்குக் கல்யாணமாகிப் போற காளியம்மா மதினியை வளையல் குலுங்க, இவன் கன்னத்தைக் கிள்ளிவிட்டு எச்சங்காட்டுவாள். இந்தக் காளியம்மா மதினிக்கு சிறுசில் இவனைத் தூக்கி வளர்த்த பெருமைக்காக, இவன் குண்டிச் சிரங்கெல்லாம் அவன் இடுப்புக்குப் பரவி, அவளும் சிரங்கு பத்தியாய் தண்ணிக்குடம் பிடிக்க முடியாமல் இடுப்பைக் கோணிக் கோணி நடந்து போனாள். இப்போதும் சிரங்குத் தடம் அவன் இடுப்பில் இருக்கும்". இது 'மதனிமார்கள் கதை' என்ற தொகுப்பிலிருந்து இப்பகுதியைக் கொண்டு அண்ணி என்பவள் மற்றொருதாய் என்பதை அறிய செய்துள்ளார் (Muthukumar, 2017).

## மனைவி உறவு

நா.முத்துகுமார் தன் மனைவியை ஐந்து வருடங்களுக்கு முன் பெண் பார்க்க சென்று அவளின் கண்களை பார்த்ததில், அக்கண்களின் வழியாக தன்னையும் தன் எதிர்காலத்தையும், வாழ்வின் இளைப்பாறுதல் தரும் நிழலையும், தன் காயங்களின் நெருப்பை தரும் நிழலையும் எல்லாவற்றுக்கும் மேல் அவள் கண்களில் தன் தாயை பார்த்ததாகவும் பதிவு செய்கின்றார்.

திருமணத்திற்கு முன் இரண்டு மாதங்களில் தன் மனைவியுடன் பல மணி நேரங்கள் பேசியதாகவும் திருமணத்திற்கு பின் பேசியவை 'சாப்பிட வரமாட்டேன்' 'பையன் ஸ்கூல்ல இருந்து வந்துட்டானா, மீட்டிங்கல இருக்கேன், கூப்பிடுறேன்' என ஓரிரு வார்த்தைகளாகும் என குறிப்பிடுகின்றார். இதை அவர் மனைவி, 'முன்பெல்லாம் நிறைய பேசுவீர்கள். இப்பொழுது குறைத்து பேசுவதைக் குறைத்துக் கொண்டீர்கள்' என வருத்தத்துடன் கேட்டால், நா. முத்துக்குமார் 'அலையின் வேகம் குறைந்தாலும் நதி எப்போதும் கரையுடன் உரையாடிக் கொண்டுதான் இருக்கும்' என்று சமாதானப்படுத்தும் நிலையையும் பதிவுசெய்துள்ளார்.

தன்னுடைய வருகைக்காக மனைவியும், மகனும் காத்திருக்கும் நேரத்தையும், சிறுசிறு செல்ல சண்டைகளில் அவள் வாதிடுவதும், பின் சமாதானம் ஆவதும் வழக்கமான நிகழ்வாகும். தன் ஜீவனை வாழ்விக்க வந்த ஜீவலட்சுமியினை மாமருந்து என்று கூறுவதையும் அவரது படைப்புகளில் காணமுடிகிறது. மனைவிக்காக எழுதிய பிடித்தப் பாடலை திருமணப் பத்திரக்கையாக எண்ணி பதிவு செய்துள்ளார்.

"எனக்காகப் பிறந்தவளைக்

கண்டுபிடித்தேன்!- அவள்

கண்ணசைவில் ஒருகோடி

கவிதைபடித்தேன்!

என்பாதிஎங்கேஎன்று

தேடிஅடைந்தேன்!-அவளைப்

பார்த்தவுடன் அடடாநான்

முழுமைஅடைந்தேன்!

இரு இதயம் ஒன்றாய்

இனிஅவள்தான் என் தாய்!

என்று தன் கவிதைகளில் மனைவியைக் கண்டு உணர்ந்ததை கூறுகிறார் (Muthukumar, 2017). மேலும்,

"வேப்பம்பூ உதிர்கின்றஎன் வீட்டுமுற்றம்

அவள் போடும் கோலத்தால் அழகாய் மாறும்

விண்மீன்கள் வந்துபோகும் மொட்டைமாடி

அவள் கொலுசின் ஓசையினால் மோட்சம் போகும்

காற்றுவந்துகதைபேசும் கொடிகயிற்றில்

அவள் புடவை அன்றாடம் கூட்டம் போடும்!

காத்திருப்பாள் ஒருத்திஎன்றநினைவுவந்து

கடிகார முள் மீதுஆட்டம் போடும்!"

இவ்வாறு நா. முத்துக்குமார் மனைவி என்ற தன் உயிரின் ஒருபாதி உறவை மிகமென்மையான உணர்வுகளோடு பகிர்ந்துள்ளதைக் காணமுடிகிறது (Muthukumar, 2017)

## அண்ணி உறவு

'மகனே! ஓ மகனே!

என் விந்திட்டவிதையே!

செடியே! மரமே! காடே!

மறுபிறப்பே!

மரணசௌகர்யமே! வாழ்!

என்ற கமல்ஹாசன் கவிதையின் மூலம் தொடங்கிய நா.முத்துக்குமார் மகனுக்கு ஒரு கடிதம் எழுதுவது போல் எழுதியுள்ளார் (Muthukumar, 2017).

தன் மகன் பிறந்ததும் அவனை அள்ளி தன் கையில் கொடுத்ததும் 'தம் மக்கள் மெய்த்தீண்டல் உயிருக்கு இன்பம்' என்ற வள்ளுவரின் சொல்லை உண்மையாக உணர்ந்ததாகவும், தான் சிறுவயதில் அனுபவித்த வாழ்வையும் தன் தந்தை 57 வயதில் விமானம் ஏறியதும், தான் 27 வயதில் விமானம் ஏறியதும் மகன் ஆறுமாத குழந்தையிலேயே வானத்தில் மிதந்ததும், வாய்ப்புகள் எவ்வளவு அரிதானது என்பதையும் கூறிவியந்துள்ளார். அவனுக்கு சில அறிவுரைகளை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"என் சின்னஞ்சிறு தளிரே! கல்வியில் தேர்ச்சிகொள். அதே நேரம் அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக் கொள். தீயைப் படித்து தெரிந்து கொள்வதைவிட தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவம்

எப்போதும் சுட்டுக் கொண்டே இருக்கும். இறக்கும் வரை இங்கு வாழ சூத்திரம் இதுதான், கற்றுப்பார், உடலைவிட்டு வெளியேறி, உன்னை நீயே உற்றுப்பார். எங்கும், எதிலும், எப்போதும் அன்பாய் இரு. அன்பைவிட உயர்ந்தது இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை. உன் பேரன்பால் இந்த பிரபஞ்சத்தை நனைத்துக் கொண்டே இரு" என்று கூறி, மேலும் உறவுகளைவிட நண்பர்கள் சேர்ந்து வாழவும், எதிர்கால எண்ணங்கள் குறித்துப் பதிவிடவும் தவறவில்லை (Muthukumar, 2017).

"உறவுகளிடம் நெருங்கியும் இரு, விலகியும் இரு. இந்த மண்ணில் எல்லா உறவுகளையும்விட மேன்மையானது நட்பு மட்டுமே. நல்ல நண்பர்களைச் சேர்த்துக் கொள். உன் வாழ்க்கை நேராகும். இவைஎல்லாம் என் தகப்பன் எனக்குச் சொல்லாமல் சொன்னவை. நான் உனக்கு சொல்ல நினைத்துச் சொல்பவை. என் சந்தோஷமே! நீ பிறந்த பிறகுதான். என் தகப்பனின் அன்பையும் அருமையையும் நான் அடிக்கடிஉணர்கிறேன். நாளை உனக்கொரு மகன் பிறக்கையில், என் அன்பையும், அருமையையும் நீ உணர்வாய். நாளைக்கும் நாளை நீ உன் பேரன் பேத்திகளும் ஏதோ ஒரு ஊரில் கொஞ்சிப் பேசிவிளையாடிக் கொண்டு இருக்கையில், என் ஞாபகம் வந்தால், இந்தக் கடிதத்தை மீண்டும் எடுத்துப் படித்துப்பார். உன் கண்களில் இருந்து உதிரும் கண்ணீர்த் துளியில் வாழ்ந்து கொண்டு இருப்பேன் நான். "எனத்தான் இறக்கப் போகிறோம் என்பதைத் தீர்க்கதரிசனமாக கண்டது போல் தன் மகனுக்கு கூறியுள்ளது மனதை நெகிழவைப்பதாக அமைகிறது (Muthukumar, 2017).

## முடிவுரை

கவிஞர் நா. முத்துக்குமார், குடும்ப உறவுகளின் பண்புகள், குணங்கள் மற்றும் அவர்களிடம் பெற்ற அனுபவங்கள் இவற்றைக் கொண்டுத்தான் வளர்ந்த நிலையில், உயர்த்திக் கொண்ட ஆளுமைகளை வாசகர்களுக்கு எளிமையான அழகுத் தமிழில் தந்துச் சென்றுள்ளதைக் காணமுடிகிறது. கூட்டுக் குடும்பங்கள் முற்றிலுமாக சிதைந்து வரும் இன்று குடும்ப உறவுகளின் உன்னதமான பண்புகள் குறித்து அவர் எழுத்துகளின் வழி பதிவு செய்யப்பட்டுள்ளன.

## References

Kanjana, Ra., (1997) Ilakiyamum Ulaviyalum, Vishnupriya pathippagam, Chennai, India.

Muthukumar, Na., (2007) Balakandam, Pattampoochi Pathippagam, Chennai, India.

Muthukumar, Na., (2007) Gramam Nagaram Maanagaram, Pattampoochi Pathippagam, Chennai, India.

Muthukumar, Na., (2014) Vedikkai Paarpavan, Vikatan Publications, Chennai, India.

Muthukumar, Na., (2016) N. Muthukumar Kavithaigal, Pattampoochi Pathippagam, Chennai, India.

Muthukumar, Na., (2017) Anilaadum Mundril, Vikatan Publications, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License